கூட்ட எண் 16 நகராட்சி அலுவலகம்,
2018 - 2019 -ம் ஆண்டு ஆரணி,
நாள் 22.02.2019.

2019-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22.02.2019ந் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1) ஆரணி நகராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017-2018ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள 13.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியினி விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| **1** | ஆரணி நகராட்சி வேம்புலி அம்மன் கோயில் எதிரில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | **8.77** | G. ராஜலட்சுமி<br>S. உஷாராணி | 0.03%குறைவு<br>0.50%அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேற்படி பணிக்கு மதிப்பீட்டு விலைவிகித்தைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி. G.ராஜலட்சுமி ஒப்பந்ததாரரரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம். மேலும், இப்பணி திட்டப் பணி என்பதால், தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1547/இ1/2017)

2) ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி,- 2018-2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள **13.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br>வருவாய் நிதி | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி வண்டிமேடு பகுதியில் தரை தளத்தில் 10 கடைகள் அடங்கிய வணிக வளாகம் கட்டுதல் | 20.00 | எஸ்.உஷாராணி<br>இ. இளங்கோவன் | 4,78 % அதிகம்<br>7,07 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்கண்ட பணி முன் ஏலத்தின் மூலம் பெறப்பட்ட வைப்புத் தொகையிலிருந்து கட்டப்பட உள்ளதால், குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியுள்ளதாலும், மதிப்பீட்டை விட 4.78% அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்தப்புள்ளியை பணியின் அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

3) ஆரணி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018-2019ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள 14.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதி குறித்த விவரங்கள் அடங்கிய உறை பிரிக்கப்பட்டு, தொழில் நுட்ப கூர்ந்தாய்வு மதிப்பீட்டு குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டதில், தகுதி பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் / நிறுவனங்களில் விலைப்புள்ளி அடங்கிய உறை 20.02.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்கள் / நிறுவனங்களின் முகவர்கள் முன்னிலையில் விலைவிகித உறை பிரிக்கப்பட்டது. விலை விகித அடிப்படையில் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்பு நோக்கியதில் உள்ள விவரங்கள் பின்வரும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | முதல் நிலை சேகரத்திற்கு தேவையான மின்கலனால் இயங்கக் கூடிய (Battery Operated Vehicle 19 Nos) வாகனங்கள் விநியோகம் செய்தல் | 34.20 | 1) M/s பிரியம் இண்டஸ்ட்ரிஸ் & எஞ்சினியரிங் பிரைவேட் லிமிடெட், சென்னை -06 | (-) 0.56 குறைவு |
| | | | 2) M/s அருண் இன்டியன் மோட்டார்ஸ் சேலம் | (-) 0.28 குறைவு |
| | | | 3) M/s நெப்டியூன் ஆட்டோ மேன்ஷன், ஈரோடு 638012 | (-) 1.61 குறைவு |
| 2 | முதல் நிலை சேகரத்திற்கு தேவையான (Light Commercial Vehicles -3Nos) டிப்பர் வசதியுடன் கூடிய இலகு ரக வாகனம் விநியோகம் செய்தல் | 16.80 | 1) M/s கிரிஸ்டல் மோட்டார்ஸ்,சேலம் - 95 | (-) 1.37 குறைவு |
| | | | 2) M/s லஷ்மி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் டேம், 636401 | (-) 2.68 குறைவு |
| 3 | திடக்கழிவு மேலாண்மை மக்கும் தன்மையுள்ள குப்பைகளை தவிர்த்து எற்படும் கழிவுகளை தரம் பிரித்து பயன்பாட்டிற்கு ஏற்றவாறு கையாளுவதற்கு Resource Recovery மைய கட்டடம் கட்டுதல். | 18.00 | 1) M/s சக்தி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், திண்டிவனம் | (+)4.79 கூடுதல் |
| | | | 2) S. உஷாராணி, ஒப்பந்ததாரர், ஆரணி | (+)7.76 கூடுதல் |

அலுவலக குறிப்பு :- மேற்குறிப்பிட்டுள்ள பட்டியலில் உள்ள வரிசை எண் 1 மற்றும் 2 பணிகளுக்கு மதிப்பீட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனங்களின் விலைப்புள்ளியை ஏற்கலாம். மூன்றாம் பணிக்கான விலைப்புள்ளி அளித்துள்ள இருவருமே மதிப்பீட்டை விட கூடுதலாக கொடுத்துள்ளனர். இருப்பினும் இப்பணி அரசின் திட்டப் பணியென்பதாலும், விரைந்து முடிக்க வேண்டிய கட்டாயத்தினாலும், முதல் அழைப்பு என்ற போதிலும், சிறப்பினமாக கருதி மதிப்பீட்டு தொகைக்கு கூடுதலாக 5%ற்கு குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s சக்தி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ், திண்டிவனம் அவர்கள் 4.79% என்ற விகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். (கோப்பு எண் 999/இ1/2016)

4) ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி ,- 2018-2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள **19.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| | **வருவாய் நிதி** | | | |
| 1 | வார்டு எண் 01 புதுகாமூர் தெரு அருகில் உள்ள ஜெயம் நகர் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.00 | எஸ்.உஷாராணி<br>இ. இளங்கோவன் | 0.03 % குறைவு<br>0.50 % அதிகம் |
| 2 | வார்டு எண் 10ல் உள்ள மாடு அடிக்கும் இடத்தில் உள்ள குப்பைகளை அகற்றி சமன் செய்யும் பணி | 2.00 | சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்<br>எஸ்.உஷாராணி | 0.50 % குறைவு<br>0.70 % அதிகம் |
| 3 | **குடிநீர் நிதி**<br>வார்டு எண் 01ல் உள்ள சமுதாய கூடம் அமைவிடம், வார்டு எண் 07ல் உள்ள ஆண்டாள் சன்னதி தெரு, வார்டு எண் 16ல் உள்ள பழனி ஆண்டவர் கோயில் தெரு, வார்டு | 10.00 | சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்<br>எஸ்.உஷாராணி | 0.03 % குறைவு<br>0.70 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | எண் 17ல் உள்ள மருதூரான் தெரு நகராட்சிப் பள்ளி பகுதியில், வார்டு எண் 18ல் உள்ள அம்பேத்கார் நகர் பகுதியில், வார்டு எண் 19ல் உள்ள சுந்தரம் தெரு ஆரம்ப பகுதி தர்மராஜா கோயில் தெரு, வார்டு எண் 22ல் உள்ள தாய் சேய் நல மைய பகுதியில், வார்டு எண் 27ல் உள்ள தர்மராஜா கோயில் பின்புறம் முள்ளிப்பட்டு சாலை பகுதியில் ஆகிய இடங்களில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து சிறு மின் விசை பம்பு பொருத்தும் பணி | | | |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணியினி அவசியத்தை கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரருக்கு நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
(கோப்பு எண் 761/இ1/2018)

5) ஆரணி நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்ட நிதி (IUDM) 2018-2019ன் கீழ் ஆரணி நகராட்சிக்குட்பட்ட சாலைகளை மேம்படுத்தும் பணிக்காக 5 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் 15.02.2019 அன்று பெறப்பட்டு தொழில் நுட்ப தகுதி குறித்த விவரம் அடங்கிய உறை பிரிக்கப்பட்டு தொழில் நுட்ப கூர்ந்தாய்வு மதிப்பீட்டு குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, குழுவின் பரிந்துரையின் பேரில் 20.02.2019 அன்று கீழ்கண்ட பணிகளுக்கான விலை விகிதம் அடங்கிய உறையினை பிரிக்கப்பட்டது.ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ள விலை விகிதம் குறித்து ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 01 கே.சி.கே நகர், புதுகாமூர் சாலை மற்றும் விரிவு பகுதி, ஜெயம் நகர், கே.கே. நகர் விரிவு பகுதி, DRS நகர், ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல், & வார்டு எண் 01 அன்னை சத்யா நகர், மற்றும் பழைய ஆற்காடு சாலை ஆகிய பகுதிகளுக்கு தார்சாலை அமைத்தல் | 247.00 | N. நடராஜன். காஞ்சிபுரம்.<br>R. பாபு, காஞ்சிபுரம் | (+) 4.98%அதிகம்<br>(+) 7.20%அதிகம் |
| 2 | வார்டு எண் 07 தணிகாசலம் தெரு முதல் சத்தியமூர்த்தி ரோடு (வாணுவ பிள்ளையார் கோயில் எதிர்புறம்) வார்டு எண் 08 பரசுராமன் தெரு, வார்டு எண் 10 நாராயணன் தெரு, வார்டு எண் 13 அருணகிரி சத்திரம் முதல் தச்சூர் சாலை வரை, வார்டு எண் 14 வெங்கடேஷ்வரா நகர், மில்லர்ஸ் சாலை மற்றும் சபாஷ்கான் தெரு முதல் வெங்கடேஷ்வரா நகர் பின்புறம், வார்டு எண் 16 பழனி | 241.50 | லக்ஷமணன், நரியம்பேட்டை, களம்பூர்.<br>K.V.கருணாநிதி, வேலூர். | (+) 4.84%அதிகம்<br>(+) 7.62%அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆண்டவர் கோயில் தெரு, வார்டு எண் 22 சாமி தெரு ஆகிய தெருக்களில் தார்சாலை அமைத்தல் | | | |
| 3 | வார்டு எண் 23 இளங்கோ தெரு,வார்டு எண் 24 வி.எல்.டி நகர், வார்டு எண் 25 சோலை நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல், வார்டு எண் 20 சூரிய குளம் தெற்கு மற்றும் மேற்கு தெரு, வார்டு எண் 23 தச்சூர் சாலை முதல் நகராட்சி நீர்த் தேக்கத் தொட்டிக்கான அணுகு சாலை, வார்டு எண் 24 பாரதியார் தெரு, வார்டு எண் 25 நாயக்கன்பாளையம், மலையாம்பட்டு ரோடு ஆகிய தெருக்களுக்கு தார்சாலை அமைத்தல் | 181.00 | 1) N.R.M. ராகவன், காஞ்சிபுரம்.<br>2) நாகராஜன், காட்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் | (+) 4.89%அதிகம்<br>(+) 5.74%அதிகம் |
| 4 | வார்டு எண் 27 EB பின்புறம், காமராஜர் நகர், அண்ணா நகர், வார்டு எண் 28 பள்ளிக்கூடத் தெரு விரிவு பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்தல், வார்டு எண் 09 இந்திரா நகர், வார்டு எண் 26 நாடகசாலை பேட்டை தெரு பின்புறம் (சரஸ்வதி நகர்) வார்டு எண் 32 கோட்டை வடக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல், வார்டு எண் 32 கோட்டை மைதானத்தை சுற்றி உள்ள சாலையில் இருபுறங்களில் மற்றும் கோட்டை வடக்கு தெரு முதல் பழைய பேருந்து நிலையம் வரை உள்ள தெருவிற்கு மழைநிர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் தளம் அமைத்தல், | 150.00 | M/s பத்ரா கன்ஸ்ட்ரக் ஷன், சென்னை - 101<br>M/s பிரதிபா எண்டர்பிரைசஸ், சென்னை - 101 | (+) 4.97%அதிகம்<br>(+) 7.68%அதிகம் |
| 5 | வார்டு எண் 30 ஜெயலட்சுமி நகர், எம்.ஜி.ஆர் நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல், வார்டு எண் 27 முள்ளிப்பட்டு ரோடு, எம்.ஜி.ஆர். நகர் வார்டு எண் 29 நீதிபதி விஜயரங்கன் தெரு, பிச்சாண்டி நகர், அன்பு நகர் பின்புறம், வார்டு எண் 30 வி.ஏ.கே நகர் & ரகுநாதபுரம் ரோடு ஆகிய தெருக்களுக்கு தார்சாலை அமைத்தல் | 180.00 | திலகவதி கன்ஸ்டரக்ஷன், வி.ஏ.கே நகர், ஆரணி.<br>N.R.M. ராகவன், காஞ்சிபுரம். | (+) 4.96%அதிகம்<br>(+) 5.07%அதிகம் |

அலுவலக குறிப்பு :- மேற்கண்ட பணிகளுக்கு விலைவிகிதம் வழங்கியுள்ள அனைவருமே அந்தந்த பணிக்கான மதிப்பீட்டு தொகையை விட கூடுதலான விழுக்காட்டிற்குத்தான் விலைவிகிதம் அளித்துள்ளனர். இருப்பினும், இத்திட்டம் அரசின் சிறப்பு திட்டமாதலினாலும், விரைந்து முடிக்க வேண்டிய கட்டாயத்தினாலும், முதல் அழைப்பு என்ற போதிலும் சிறப்பினமாக கருதி 5 சிப்பங்களின் பணிக்கான மதிப்பீட்டு தொகைக்கு கூடுதலாக 05% விழுக்காட்டிற்கு குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளியினை ஏற்கவும், பணி ஆணை வழங்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 3531/இ1/2019)

6) ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி,- 2018-2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள **21.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br>வருவாய் நிதி | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி வண்டிமேடு பகுதியில் தரை தளத்தில் அமையவுள்ள புதிய வணிக வளாக கட்டடத்தின் முதல் தளத்தில் வணிக பயன்பாட்டிற்காக கட்டடம் அமைத்தல் | 14.00 | எஸ்.உஷாராணி<br>இ. இளங்கோவன் | 4.77 % அதிகம்<br>6.57 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்கண்ட பணி முன் ஏலத்தின் மூலம் பெறப்பட்ட வைப்புத் தொகையிலிருந்து கட்டப்பட உள்ளதால், குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியுள்ளதாலும், மதிப்பீட்டை விட 4.77% அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்தப்புள்ளியை பணியின் அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.

கூட்ட எண் 17
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 28.02.2019.

2019-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28.02.2019ந் தேதி வியாழக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் ஜனவரி 2019 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி 2019 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான சித்தா மருத்துவமனைக்கு தேவையான மருந்துகள் வாங்கி தர சித்தா மருத்துவ அலுவலர் குறிப்பின்படி, IMPCOPS LTD சென்னை நிறுவனத்திடம் வாங்க தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப் :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2) மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (கோப்பு எண் 5783/2007/எச்1)

4. உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை திருவண்ணாமலை அவர்களின் 2016-2017ம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் வருவாய் நிதி பத்தி எண் 40ல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்க, 2016-2017ம் ஆண்டு தணிக்கை பணியாளர்களின் 50% ஊதியம் மற்றும் பிற படிகளின் உண்மை செலவு தொகை ரூ.1,02,302/- தணிக்கை கட்டணம் கணக்கிடப்பட்டுள்ளது. இதனை அரசு நிதியில் உரிய தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். தணிக்கையாண்டில் இறுதியில் பின்வரும் விவரப்படி நிலுவையாக உள்ள தணிக்கை கட்டணம் தொகை ரூ. 1,02,302/- உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு விவரம் தணிக்கைக்கு காண்பிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி 2016-2017ம் ஆண்டிறக்கான தணிக்கை கட்டணம் ரூ. 1,02,302/-ஐ உரிய அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1) மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2) மேற்படி தொகையை வருவாய் நிதியிலிருந்து செலுத்தலாம். 3) மேலும், அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறைக்கு செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 2706/எப்1/2017)

5. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் செய்யாறு அவர்களின் கடிதம் ந.க.எண் 2833/இ4/2013 நாள் 05.02.2019ன்படி, நகரப்பகுதியில் நோய் தடுப்பு பணிகள் பாதிக்காத வகையில் ஏற்கனவே பணி செய்த வரும் டெங்கு நோய் தடுப்பு தற்காலிக பணியாளர்கள் ஜனவரி 01முதல் 31வரையிலும், பிப்ரவரி 2019 04ம் தேதி முதல் ஏப்ரல் 2019 வரை 4மாதங்களுக்கு 36 தற்காலிக பணியாளர்கள் நியமித்து டெங்கு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்கள் நிர்ணயித்த தினக்கூலி ரூ. 280/- என்ற அடிப்படையில் ஆகும் தோராய செலவினம் ரூ. 13.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- பொது சுகாதாரம் டெங்கு மற்றும் சிக்குன் குனியா நோய் தடுப்பு பணி அத்தியாவசியம் என்பதால், ஜனவரி 2019 முதல் ஏப்ரல் 2019 வரை தற்காலிக பணியாளர்கள் பணியமர்த்தி கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம். (கோப்பு எண் 1537/2012/எச்1)

6. இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து தற்போத திருவத்திபுரம் நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரியும் திரு. ஆர்.வேலவன் என்பவர் ஆரணி நகராட்சியில் இரவு காவலராக 01.05.1992 முதல் 06.01.2004 வரையிலான பணிபுரிந்த காலத்தினை பணிக்காலமாக உத்திரவிட வேண்டும் என சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் WP NO. 26109/2011 மற்றும் MP 1/2011 தீர்ப்பு நாள் 20.02.2018ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதன் மீது நீதி மன்ற அவமதிப்பு வழக்கு எண் 173/2019 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகும் அரசு வழக்கறிஞர் திரு. எம்.ஏழுமலை என்பவர் 31.01.2019ம் தேதிய கடிதத்தில் வழக்கு கட்டணமாக ரூ. 15000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்க கோரி கடிதம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி தொகையினை வழக்கு கட்டணமாக வழங்க மன்றம் அனுமதிக்கு கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று வழக்கினை நடத்திட மேற்படி வழக்கறிஞருக்கு தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (கோப்பு எண் 8541/2006/சி1)

7. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு C பிளாக் 7, நகரளவு எண் 3/1, 3/2 - இல் 4601 சதுர மீட்டர் அளவுள்ள இடத்தினை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு மையத்திற்கு மாற்றம் செய்து தருமாறு அரசாணை எண் 384 வருவாய் துறை, நாள் 08.12.2017-இல் தெரிவிக்கப்பட்டுள்ளத என வட்டாட்சியர் கடித ந.க.எண் ஜி1/2353/2018 நாள் 06.02.2019-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சர்வி வார்டு C பிளாக் 7, நகரளவு எண் 3/1, பரப்பளவு 4345 சதுரமீட்டர் இடமானது டவுன் கிளப் எனவும் மற்றும் நகரளவு எண் 3/2, பரப்பளவு 255.5 சதுர மீட்டர் இடமானது டவுன்ஹால் எனவும் சர்வே ஆவணங்களில் பதியப்பட்டுள்ளது. மேற்காணும் இடம் சர்வே ஆவணங்களின்படி, சர்க்கார் மனை என்றும், டவுன் கிளப் மற்றும் டவுன்ஹால் என்ற வகைப்பாட்டில் உள்ளதனை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு மையத்திற்கு நிலமாற்றம் செய்ய உள்ளதால், நகர மன்ற தீர்மானம் கோரி வட்டாட்சியர், ஆரணி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இப்பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 237 / எப்1 / 2019)

8. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்களின் செயல்முறைகள் எண் அ6/986/2019 நாள் 13.02.2019 கடிதத்தில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஆரணி நகராட்சி என்.எஸ். நகர் அங்கன்வாடி மையம் தரம் உயத்துதல் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது..
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம், மேலும், மேற்படி பணிகள் மேற்கொள்ள பணியினி அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

9. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான காலைகள், பாட்டை பகுதிகள், நகராட்சிக்கு சொந்தமான இடங்கள், பேருந்து நீலையங்கள், தாய்சேய் நலவிடுதி கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், பூங்காக்கள், நீர்த் தேக்கத் தொட்டிகள், அலுவலக கட்டடங்கள், சுடுகாடு, இடுகாடு பகுதிகள், பொதுக் கழிவறை கட்டடங்கள், நீர்நிலைய அமைப்புகள், அரசு சார்ந்த அனைத்து கட்டடங்கள் நகராட்சி வரைபடத்தில் GECGRAPHIC INFORMATION SYSTEM (GIS) BASED TOWN MAP முறையில் பதிவு செய்ய வேண்டியுள்ளதால், GECGRAPHIC INFORMATION SYSTEM (GIS) BASED TOWN MAP அமைப்பின்படி நகராட்சி வரைபடத்தில் பதிவுகள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ. 3.60 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. மேலும் மேற்படி பணிகள் மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும், தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். 3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.. கோப்பு எண் 95/2018/எப்1)

10. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான கண்ணப்பன் தெரு உயர்நிலைப் பள்ளி மற்றும் தச்சூர் சாலையில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளை தனியார் பள்ளிகளுக்கு இணையாக தரம் உயர்த்திடவும், மாணவ, மாணவியர் கல்விதிறன் மேம்பட பயின்று தரவும் ஸ்மார்ட் கிளாஸ்ரூம் அமைத்திட மேற்குறிப்பிட்டுள்ள பள்ளிகளின் வகுப்பறையில் கண்கவர் வண்ணம் தீட்டி, எழில்மிகு திரைமறைவு, அலுமினியம் கதவுகள்,குளிர்சாதனம் போன்ற வசதிகள் செய்யவும், மாணவ, மாணவியர்கு பயிற்றுவிக்க உதவும் ஓவியம் மற்றும் உபகரணங்கள் பொருத்தி தர மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மதிப்பீடு ரூபாய் 9.90 லட்சம் வீதம் இரண்டு பள்ளிகளுக்கு ரூ. 19.80 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி பணி மேற்கொள்ள அவசர அவசியம் கருதி நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை ஏற்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

11. ஆரணி நகராட்சி புதிய பேருந்து வளாகத்தில் உள்ள நம்ம டாய்லெட் பொதுக் கழிவறையில் செப்டிக் டேங்க் சுத்தம் செய்தல், குழாய் இணைப்புகள் பழுது சரி செய்தல், டாய்லெட்டிலிருந்து செப்டிக் டேங்க் செல்லும் பி.வி.சி குழாய் பழுது சரி செய்தல் போன்ற பணிகள் செய்ய அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ் குறிப்பிட்டுள்ள விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பட்டது.

1. திரு. இ.இளங்கோவன் ஒப்பந்ததாரர்,
   11/6 நாயக்கன் பாளையம், சைதாப்பேட்டை — ரூ. 19600 /-
   ஆரணி,
1. திரு. அ.அசோக்குமார், ஒப்பந்ததாரர்,
   50 சின்ன கடை தெரு, ஆரணி. — ரூ. 21500 /-
2. திரு.எம். பழனி, ஒப்பந்ததாரர்,
   02 ரூப்சிங் தெரு, ஆரணி. — ரூ. 20750 /-

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை செய்து முடித்ததை மன்றம் ஏற்கலாம். 3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

12. ஆரணி நகராட்சி கோட்டை மேற்குத் தெரு, கோட்டை வடக்குத் தெரு பகுதிகளில் அரசு அலுவலகங்கள், நீதிபதி குடியிருப்புகள் நீதிமன்ற வளாகங்கள், காவல் நிலையங்கள், பொதுப்பணித்துறை அலுவலகங்கள், வட்டாட்சியத் அலுவலகம், தீயணைப்புத் துறை அலுவலகம், அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் பள்ளிகள், தற்காலிக காய்கறி மார்கெட் ஆகியவை உள்ளதால், கோட்டை மேற்கு தெரு, மற்றும் கோட்டை வடக்கு தெரு ஆகிய சாலைகள் பழுது ஏற்பட்டு போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளது. எனவே, கோட்டை மேற்கு தெரு, மற்றும் கோட்டை வடக்கு தெரு ஆகிய சாலைகள் செப்பனிடும் பணிகள் செய்ய அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ் குறிப்பிட்டுள்ள விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பட்டது.

1. திரு. இ.இளங்கோவன் ஒப்பந்ததாரர்,
   11/6 நாயக்கன் பாளையம், சைதாப்பேட்டை — ரூ. 29600 /-
   ஆரணி,
3. திரு. அ.அசோக்குமார், ஒப்பந்ததாரர்,
   50 சின்ன கடை தெரு, ஆரணி. — ரூ. 31500 /-
4. திரு.எம். பழனி, ஒப்பந்ததாரர்,
   02 ரூப்சிங் தெரு, ஆரணி. — ரூ. 30750 /-

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை செய்து முடித்ததை மன்றம் ஏற்கலாம். 3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

13. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் அ6/12863/2018 நாள் 01.02.2019ல் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-2019ன் கீழ் ஆரணி நகராட்சி கோட்டை மைதானத்தில் குழந்தைகள் பூங்கா அமைக்க மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்தில் நகராட்சி மூலம் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப் பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம். மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணி திட்டப் பணி என்பதால் அவசியம் கருதி நகர் மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 3332/2018/இ1)

14. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மண்டலம், வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண் 7301 / 2012 / சி1 நாள் 09.02.2019ல் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான HP Laserjet M1005 MFP (12A Tonar) Printer with Scanner 1 எண்ணிக்கை வாங்கி வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ் குறிப்பிட்டுள்ள விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பட்டது.

1. Gets Computer Accessories,
   சுண்ணாம்புக்கார தெரு, வேலூர் — ரூ. 22538 /-

2. BRINDHA AGENCIES — ரூ. 22715 /-
   சுண்ணாம்புக்கார தெரு, வேலூர்.

3 NETWARE COMPUTERS. SALES & SERVICE, — ரூ. 22833 /-
   சுண்ணாம்புக்கார தெரு, வேலூர்.

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை செய்து முடித்ததை மன்றம் ஏற்கலாம். 3. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

15. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்று பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் அ6/12863/2018 நாள் 25.02.2019ல் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-2019ன் கீழ் ஆரணி நகராட்சி அருணகிரி சத்திரம் பகுதியில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்தில் நகராட்சி மூலம் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப் பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம். மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணி திட்டப் பணி என்பதால் அவசியம் கருதி நகர் மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.
(கோப்பு எண் 3332/2018/இ1)

16. 2019ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் நடைபெற உள்ளதையோட்டி, ஆரணி நகராட்சிக்கு சொந்தமான அனைத்து பள்ளிகளிலும் வாக்குச் சாவடி அமைய உள்ளதால், அப்பள்ளிகளில் உள்ள ஊனமுற்றோர் மற்றும் வயதானோர் செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள சாய்தளம் சரி செய்தல், குடிநீர் வசதிகள் செய்தல், மற்றும் கழிவறைகள் சீர் செய்தல் போன்ற பணிகள் செய்ய ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை ஏற்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

17. ஆரணி நகராட்சியில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் குறைவான விலையில் உணவு வழங்க அமைக்கப்பட்டுள்ள அம்மா உணகத்தில் உணவு தயாரிக்க பயன்பாட்டில் உள்ள நீராவி அடுப்பு, நீராவி அனைகலன், இட்லி தயாரிக்க பயன்படும் நீராவி அடுப்பு ஆகிய பழுது ஏற்பட்டு உணவு தயாரிக்க காலதாமதமாகிறது மேலும் சிரமங்கள் ஏற்படுகின்றது. எனவே, மேற்குறிபிட்டுள்ள நீராவி கலன்களை பழுது சரி செய்ய ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.1.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை ஏற்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

18. ஆரணி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14 திருவள்ளுவர் தெருவில் உள்ள நகர் நல மருத்துவமனையில் மின்சார வசதி, குளிர்சாதன பெட்டிகள், மற்றும் கழிவறை பராமரிப்பு போன்ற பணிகள் செய்ய ரூ.5.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை ஏற்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

19. ஆரணி நகராட்சிக்குட்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகள் பழுது ஏற்பட்டு சரி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. வருகின்ற நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தலை எதிர்நோக்கி 1. கண்ணப்பன் தெரு நகராட்சி பள்ளி, 2. பாலாஜி நகர் நகராட்சி பள்ளி, 3. வடக்குமாட வீதி நகராட்சி பள்ளி, 4. அனந்தபுரம் நகராட்சி பள்ளி, 5. மருசூரான் தெரு நகராட்சி பள்ளி ஆகிய பள்ளிகளில் கழிவறைகள் பழுதுகள் சரி செய்து பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 8.50 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும், தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 761/2018/இ1)

20, ஆரணி நகராட்சியில் கல்வி நிதி, - 2018-2019ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள **22.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br>கல்வி நிதி | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான கண்ணப்பன் தெரு உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் கல்வித் திறன் மேம்படுத்த ஸ்மார்ட் கிளாஸ்ரூம் அமைக்கும் பணி | 9.90 | **M/s TREASURE ENVISION, MADURAI - 625 020**<br>**M/s JMD SOLUTION, MADURAI - 625 009** | 0.18 % குறைவு<br>0.48 % அதிகம் |
| 2 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான தச்சூர் ரோடு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் மாணவர்கள் கல்வித் திறன் மேம்படுத்த ஸ்மார்ட் கிளாஸ்ரூம் அமைக்கும் பணி | 9.90 | **M/s TREASURE ENVISION, MADURAI - 625 020**<br>**M/s JMD SOLUTION, MADURAI - 625 009** | 0.75 % குறைவு<br>0.48 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணியினி அவசியத்தை கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரருக்கு நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

21. ஆரணி நகராட்சியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பின்வரும் பணி மேற்கொள்ள **26.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி என். எஸ் நகர் அங்கன்வாடி மைய கட்டடம் தரம் உயர்த்துதல் | 2.00 | இ.இளங்கோவன்<br><br>ஆர். கந்தன் | 0.30 % குறைவு<br><br>0.50 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணியினி அவசியத்தை கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரருக்கு நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

22. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி 2018 - 2019ன் கீழ் பின்வரும் பணி மேற்கொள்ள **26.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் GECGRAPHIC INFORMATION SYSTEM (GIS) BASED TOWN MAP முறையில் நகராட்சிக்கு சொந்தமான சாலைகள், பாட்டை பகுதிகள், நகராட்சிக்கு சொந்தமான இடங்கள், பேருந்து நீலையங்கள், தாய்சேய் நலவிடுதி கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், பூங்காக்கள், தெருவிளக்குகள், நீர்த் தேக்கத் தொட்டிகள், அலுவலக கட்டடங்கள், சுடுகாடு, இடுகாடு பகுதிகள், பொதுக்கழிவறை கட்டடங்கள், நீர்நிலை அமைப்புகள், அரசு சார்ந்த அனைத்து கட்டடங்கள் குறித்து அமைவிடத்தை ஆரணி நகர வரைபடத்தில் பதிவுகள் செய்யும் பணி | 3.60 | M/s HAGROIS Chennai - 62<br><br>M/s GEOSCAN Pandycherry | ரூ.3,59,500/-<br><br>ரூ. 3,61,000/- |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணியினி அவசியத்தை கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரருக்கு நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். . (கோப்பு எண் 761/இ1/2018)

23. ஆரணி நகராட்சியில் வருவாய் நிதி, குடிநீர் நிதி கல்வி நிதி 2018 - 2019ன் கீழ் பின்வரும் பணி மேற்கொள்ள **28.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம்<br>**வருவாய் நிதி** | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி அம்மா உணவகத்தில் உள்ள நீராவிக்கலன் பழுது பார்த்தல் பணி | 1.00 | M/s சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் திண்டிவனம்.<br>பி. சந்திரசேகரன், ஆரணி | 0.03 % குறைவு<br><br>0.80 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | வார்டு எண் 14 திருவள்ளுவர் தெருவில் அமைந்துள்ள சுகாதார மையத்தில் மின்சாரப் பணி மற்றும் இதரப் பணிகள் செய்தல் | 5.00 | இ.இளங்கோவன்<br><br>ஆர். கந்தன் | 0.03 % குறைவு<br><br>0.50 % அதிகம் |
| 3 | **கல்வி நிதி** ஆரணி நகராட்சிக்கு சொந்தமான அனைத்து பள்ளிகளிலும் சாய்தளம் சரிசெய்தல், குடிநீர் வசதிகள் மற்றும் கழிவறைகள் சீர் செய்தல் | 2.00 | M/s சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் திண்டிவனம்.<br>பி. சந்திரசேகரன், ஆரணி | 0.04 % குறைவு<br><br>0.80 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணியினி அவசியத்தை கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரருக்கு நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
(கோப்பு எண் 761/இ1/2018)

24. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகன மேடை பகுதியில் உள்ள நுண்ணுயிர் உரம் தயாரிக்கம் மையப் பகுதி அருகில் குவிக்கப்பட்டுள்ள குப்பைகளை அகற்றி சுத்தம் செய்து MCC மையத்தினை தூய்மையாக பராமரிக்க வேண்டும் என களப்பணி ஆய்வின்போது மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் வேலூர்-12 அவர்கள் ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், நிர்வாக நலன் கருதி அக்குப்பை குவியல்களை JCB மற்றும் டிராக்டர் டிப்பர் கொண்டு பயன்படுத்தி அகற்றியதற்கும், ஒருநாள் வாடகை தோராய செலவினம் ரூ.10,000/- மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதி வழங்கலாம். 2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 3419/2018/எச்1)

